BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

**ப்ராம்ப்ட்டன் நகரமானது, கோவிட் 19 தொற்று பரவல் சமயத்தில் தனது பன்முகத்தன்மை கொண்ட சமுதாயத்தைக் கொண்டாடி மகிழ்வதை ஜூன் மாதத்திலும் தொடர்கிறது**

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 1, 2020) – ஆன்லைன் கலாச்சார அனுசரிப்புக்களை ஏற்றுக்கொள்வதன் மூலம், ப்ராம்ப்ட்டன் நகரமானது கோவிட் -19 தொற்று பரவலின் பாதிப்புக்களுக்கு தன்னை ஏற்புடையதாக்கிக் கொள்கிறது; இதில் ஜூன் மாதத்திய வெவ்வேறு பாரம்பரிய மாதங்கள் மற்றும் ஜூன் 21 ஆம் தேதிக்கான தேசிய சுதேசி மக்கள் தினம் ஆகியவையும் அடங்கும்.

**ஜூன் மாதத்திய வெவ்வேறு பாரம்பரிய மாதங்கள்**

ஜூன் மாதம் என்பது ஃபிலிப்பினோ பாரம்பரிய மாதம், இத்தாலிய பாரம்பரிய மாதம் மற்றும் போர்த்துக்கீசிய பாரம்பரிய மாதம் என பிரகடனம் செய்யப்படுகிறது. இந்த வருடம் இப்படியான ஒவ்வொரு சமுதாயத்தையும், மேயர் பேட்ரிக் ப்ரவுன் மற்றும் கவுன்சிலர்கள் சிறப்பு வீடியோ செய்திகள் மூலம் கவுரவப்படுத்துகிறார்கள். இந்த வீடியோக்கள் மாநகரின் யூடியூப் (YouTube) மற்றும் இதர சமூக ஊடகங்களில் மாதம் முழுக்க கிடைக்கப்பெறும்.

2019 ஆம் ஆண்டில், ப்ராம்ப்ட்டன் நகரின் பன்முகத் தன்மையை கவுரப்படுத்துவதற்காக, இந்த மாநகரம் இந்த சமுதாய அங்கீகரிப்பு திட்டத்தை துவக்கியது. இந்த வருடம் தனிநபர்கள் முன்னிலையில் இருந்து செய்யும் கொண்டாட்டங்கள் இல்லை என்றாலும், ப்ராம்ப்ட்டன் நகரின் பன்முகத்தன்மை கொண்ட சமுதாயத்தைப் பற்றி அறிந்து, அதைக் கொண்டாட, இந்த சந்தர்ப்பத்தை எடுத்துக்கொள்ளுமாறு மாநகரம் உற்சாகமூட்டுகிறது.

**தேசிய சுதேசி மக்கள் தினத்தை கொண்டாடுங்கள் -ஆன்லைனில்!**

குழந்தைகளின் செயல்பாடுகள், பாரம்பரிய உணவு வகைகளை சமைத்தல் மற்றும் பின் வருபவை உள்ளிட்ட வீடியோக்களை காண்பதன்மூலம் ப்ராம்ப்ட்டன் நகரின் தேசிய சுதேசி மக்கள் தினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளுங்கள்: ஆரம்ப கட்ட பிரார்த்தனை, மேயர் பிரவுன் அவர்களின் உரையாற்றல், சுதேசி கல்வியாளராகிய ஜெஸ்ஸி திஸ்ஸில் அவர்களின் விளக்கப்படம். பாரம்பரிய நிகழ்த்து கலைகள், ட்வின் ஃப்ளேம்ஸ் பேண்ட் (Twin Flames)-இன்

இசை மற்றும் முடிக்கும் முன்பாக ஒரு பிரார்த்தனை. இந்த டிஜிட்டல் நிகழ்ச்சியானது இண்டிஜீனியஸ் நெட்வொர்க் (The Indigenous Network) உடன் சேர்ந்து ஏற்பாடு செய்யப்படுகிறது.

இந்தக் கொண்டாட்டங்கள் ஆன்லைனில்  கிடைக்கப்பெறுகின்ற வலைத்தள பக்கம் இதோ: www.brampton.ca/NIPD.

ப்ரைட் இன் ஜூலை (Pride in July) என்னும் கொண்டாட்டத்தை ப்ராம்ப்ட்டன் நகரமும் பீல் ப்ரைட் (Peel Pride) -உம் சேர்ந்து அங்கீகரிக்கும். இந்தக் கொண்டாட்டம் பற்றிய விபரங்கள் வரவிருக்கும் வாரங்களில் வெளியிடப்படும்.

**அறிஞர் கூற்றுக்கள்**

“மற்ற கலாச்சாரங்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கும், நமது பன்முகத்தன்மை கொண்ட நகரத்தை உருவாக்குகின்ற பல சமூகங்கள் பற்றி அறிந்து கொள்வதற்கும், நான் அனைவரையும் ஊக்குவிக்கிறேன்.  இந்த ஆண்டு நாங்கள் கொண்டாட்டங்களை மக்களிடையே நேரில் நடத்தவில்லை என்றாலும், ஆன்லைனில் நாங்கள் உபசரிப்பு செய்கின்ற கொண்டாட்டங்களைக் கண்டு ப்ராம்ப்ட்டன் நகரின் பன்முகத்தன்மையைக் கண்டறியுங்கள்; அதே சமயத்தில் உடல் ரீதியான சமூக விலகலையும் பராமரியுங்கள்!”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ நமது பன்முகத்தன்மையே நமது மிகப்பெரிய பலங்களில் ஒன்றாகும் என்பதை ப்ராம்ப்ட்டன் நகரம் ஏற்றுக்கொள்கிறது. ஒரு நகரத்தின் நிர்வாகமாக  இருந்தபடி நாங்கள் செய்யும் எல்லா விஷயங்களின் மையத்திலும் மக்கள்தான் இருக்கிறார்கள்;  நமது சமூகத்தை உருவாகச் செய்கின்ற பன்முகத்தன்மைக்கு ஆதரவு காட்டி அதில் நாங்கள் தொடர்ந்து ஈடுபடுவதையும் உறுதிசெய்வதும் இதில் அடக்கம்.”

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும்,  சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான  ஆரோக்கியமிக்க ஒரு நகரைக்

கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் பரிமாற்றம்
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca